முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 100 வது பிறந்த நாளை முன்னிட்டு நாகை மாவட்டம் திருக்குவளையில் உள்ள கலைஞர் இல்லத்தில் உள்ள சிலைக்கு நாகை மாவட்ட தி.மு.க. செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், ப.கோவிந்தராஜன், க.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், கற்பகம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், செல்வ.செங்குட்டுவன், சோ.பா.மலர்வண்ணன், உதயம் வே.முருகையன், என்.ஆனந்த், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், எஸ்.பி.டி.சார்லஸ், கோ.சிவக்குமார் மற்றும் பலர் உள்ளனர்.

உ.மதிவாணன், எஸ்.கே.வேதரத்தினம், இல.மேகநாதன் பங்கேற்பு!

திருக்குவளையில் கலைஞர் பிறந்த இல்லத்தில் 100வது பிறந்த நாள் நிகழ்ச்சி!

முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலைக்கு என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மரியாதை!

நாகை, ஜூன் 5 -

நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த இல்லத்தில் கலைஞர் சிலை வைக்கப்பட்டுள்ளது. அன்னை அஞ்சுகம் அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைஞர் 100 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது சிலைக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

நிகழ்ச்சியில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ். கே. வேதரத்தினம், அன்னை அஞ்சுகம் அறக்கட்டளை உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க. ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம், பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், எஸ்.பி.டி.சார்லஸ், கோ. சிவக்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா. குமார், சோ.பா.மலர்வண்ணன், தாமஸ்ஆல்வாஎடிசன், செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், சிக்கல் என்.ஆனந்த், உதயம் வே.முருகையன். நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, வேளாங்கண்ணி பேரூர் கழகச் செயலாளர் மரிய சார்லஸ், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எஸ்.வி.டி.அருள், ப. உதயக்குமார், சத்திய மூர்த்தி, சாதிக், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் எஸ். செல்வா, எலக்ட்ரிகல் பாலா,

மாவட்டக் கழக பிரதிநிதி ஞானசேரகன், அசோக்குமார், டேனியல் சத்தியா ஒன்றியக் குழு தலைவர்கள் வாசுகிநாகராஜன், வே.அனுசியா, முன்னாள் ஒன்றிய துணைச் செயலாளர் பஞ்சுநாகராஜன், இளைஞர் அணி இல.மே.ஜெகன், திருக்குவளை கிளை கழகங்களின் நிர்வாகிகள் பி.தியாகராஜன், எம்.ராமச்சந்திரன், தங்க.தியாகராஜன் பாஸ்கரன், கலைஞர் இல்ல பாதுகாப்பாளர் தியாகராஜன், ஒன்றியக் குழு உறுப்பினர் சுதாஅருணகிரி மற்றும் கிளை கழக நிர்வாகிகள் கழகத்தினர் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக கலைஞரின் தந்தை முத்துவேலர், தாய் அஞ்சுகம் அம்மையார், முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் ஆகியோர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர் கலைஞர் இல்ல முகப்பில் ஒடிசா ரயில் விபத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மவுன அஞ்சலி செலுத்தினார்கள்.

ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பில்

மஸ்கட் மாநகரில்- முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

பேச்சுப்போட்டி - ஓவியப் போட்டி- கவிதைப் போட்டி நடத்தி எழுச்சியுடன் கொண்டாடினர் !

மஸ்கட், ஜூன் 5 -

ஓமன் தி.மு.க. அயலக அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா மஸ்கட் மாநகரில் நடைபெற்றது. அயல்நாடுகளில் செயல்படும் அணிகளில் முதலாவது அணியாக கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை கொண்டாடியது என்றும் இந்த ஆண்டு முழுவதும் ஓமன் தி.மு.க. சார்பாக பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக கழகத் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க குழந்தைகள் மற்றும் மாணவ செல்வங்கள் பங்கு பெறும் வகையில் பேச்சுப்போட்டி, ஓவியப் போட்டி, கவிதைப் போட்டி என பல்வேறு போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டு கலைஞரின் சாதனைகளை இளம் தலைமுறையினர் அறியும் வண்ணம் நிகழ்ச்சி அமைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட குழந்தைகள் மற்றும் மாணவச் செல்வங்கள் தங்களது படைப்புகளை நேரடியாக விழா மேடையில் அரங்கேற்றி காட்டினர். முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திட்டங்களை ஓவியமாகவும் கவிதையாகவும் அமைத்திருந்தது பாராட்டிற்குரியதாக இருந்தது.

மேலும் கலைஞர் பற்றிய பேச்சு போட்டிகளில் மிக அதிகமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அடுத்த தலைமுறையினரின் இதயங்களில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நீங்கா இடம் பெற்று அமர்ந்திருக்கிறார். கலைஞர் தான் வழங்கிய திட்டங்கள் மூலம் அடுத்த தலைமுறையினருக்கும் விதைகளை விதைத்து சென்றிருக்கிறார். இந்நிகழ்ச்சியில் மகளிர் அணியினர் மற்றும் பெரியவர்கள் பங்கேற்ற போட்டிகளும் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட அனைவருக்கும் ஓமன் திமுக சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் ஓமன் தி.மு.க. செயலாளர் சிவக்குமார், தலைவர் பாலமுருகன், பொருளாளர் சிவசெந்தில், மஸ்கட் புக மேந்தி, நவநீதகிருஷ்ணன், அப்துல் சமத், முஹம்மது, பாரூக், பர்ஷாத், கருணாநிதி, திருமாவளவன், அன்பில் சிவா, மருத்துவர் சென்பாலன், கவிஞர் சுதர்சன், செல்வின், மாணிக்க வேல், ராஜன், பழனி குமார், கோபாலகிருஷ்ணன், தங்கதுரை, கரிகாலன், அசோக்குமார் மகளிர் அணியைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் பல்வேறு துறையை சார்ந்த வல்லுனர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

88 வது வட்டச் செயல்வீரர்கள் கூட்டம் !

வட்டச் செயலாளர் சி.சீனிவாசன் அறிக்கை !

சென்னை, ஜூன் 5 -

88-வது வட்டச் செயலாளர் சி.சீனிவாசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதலின்படி அம்பத்தூர் தெற்கு பகுதி 88 வது வட்டத்தில் உள்ள அனைத்து நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று 5—6-2023 மாலை 5 மணிக்கு பாடி வடக்கு மாவட்ட வீதி அண்ணா அறிவு வளர்ச்சி மன்றத்தில் வட்ட அவைத் தலைவர் நாகராஜ் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. மண்டல குழு தலைவர் பி.கே. மூர்த்தி பகுதி செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்குகின்றனர்.

எனவே 88 வது வட்டத்திலுள்ள பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர் , துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் இளைஞர் அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள்,வட்ட செயற்குழு உறுப்பினர்கள், மற்றும் பி.எல்.ஏ. 2 பாக முகவர்கள்,, நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் சி.சீனிவாசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்தில் துவக்க நிகழ்ச்சியாக மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக் அவர்கள் வழங்கினார். உடன் மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர் முஸ்தபா, உதகை நகர செயலாளர் ஜார்ஜ், உதகை தெற்கு ஒன்றிய செயலாளர் பரமசிவன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சதக்கத்துல்லா, தொரை, உதகை நகராட்சி தலைவர் வாணீஸ்வரி, உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் மாயன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, பிரச்சாரக்குழு, சமூக வலைதளக்குழு, ஆலோசனைக் குழு சார்பில்

கலைஞர் நூற்றாண்டு விழா! இன்று நடைபெறுகிறது!

முத்தமிழறிஞர் கலைஞரின் திரைப்படப்பாடல்களை தொகுத்து இசையரங்கம், நாட்டிய அரங்கம்!

சென்னை, ஜூன் 5

தி.மு.க. மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு, சமூக வலைதளக்குழு, ஆலோசனைக் குழு சார்பில் இன்று (5.6.2023, திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு தலைவர் கலைஞர் எழுதிய திரைப்படப் பாடல்களைத் தொகுத்து இசையரங்கம், நாட்டிய அரங்கம் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் மகளிரணித் தலைவர் விஜயா தாயன்பன் வரவேற்புரையாற்றுகிறார். மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி, மகளிரணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இன்று (5.6.2023, திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு திரைப்பட இசையமைப்பாளர் கலைமாமணி தாயன்பன் குழுவினரின் இசை நிகழ்ச்சியும், மாலை 6 மணிக்கு கலைமாமணி பார்வதி ரவி கண்டசாலா குழுவினரின் 25 நடனக் கலைஞர்கள் பங்கேற்கும் நாட்டிய நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

மாலை 7 மணிக்கு வாழ்த்தரங்கம் நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கு தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை தாங்குகிறார்.

எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., தலைமைக் கழக செய்தி தொடர்பு அணித்தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மாநில திட்டக்குழு உறுப்பினர் எழிலன் எம்.எல்.ஏ., சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., ஆயிரம் விளக்கு பகுதிச் செயலாளர் மா.பா. அன்புதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மகளிரணி துணைச் செயலாளர்கள் அமைச்சர் கயல்விழி செல்வராஜ், பவானி ராஜேந்திரன், அங்கையற்கண்ணி, மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர்கள் சத்யா பழனிகுமார், ரேகா பிரியதர்ஷினி, விஜிலா சத்யானந்த், மாலதி நாகராஜ், மகளிர் பிரச்சாரக்குழு செயலாளர்கள் சேலம் சுஜாதா, ராணி ரவிச்சந்திரன் எம்.சி., அமலு எம்.எல்.ஏ., டாக்டர் மாலதி நாராயணசாமி, மோ. தேன்மொழி, ஜெசி பொன்ராணி, சமூக வலைதளப் பொறுப்பாளர்கள் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., டாக்டர் யாழினி, ரியா,

ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் டாக்டர் காஞ்சனா கமலநாதன், சங்கரி நாராயணன், கார்ல் மார்க்ஸ், சித்திரமுகி சத்யவாணிமுத்து, வாசுகி ரமணன், காயத்ரி சீனிவாசன், மலர் மரகதம், சிம்லா முத்துச்சோழன் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

முடிவில் உமா மகேஸ்வரி நன்றி கூறுகிறார்.

தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட விஜயராகவா சாலையில்

நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

சென்னை, ஜூன் 5 -

தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட விஜயராகவா சாலையில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு117க்குட்பட்ட விஜயராகவா சாலையில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தினை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று (04.06.2023) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் தெரிவித்தாவது :

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் உலகதரமான மருத்துவ சேவைகளை தேசிய சுகாதார இயக்ககம் மூலம் கிராமப் பகுதிகளில் இயங்கும் துணை சுகாதார நிலையங்களை கிராமப்புற ஆரோக்கிய நல மையங்களாகவும், அதன் உள்கட்டமைப்பு வசதி, மனித வளம் மற்றும் பொதுமக்களால் எளிதில் அவசரத் தேவைகளுக்கு அணுக இயலாத நிலையில் உள்ள மக்களுக்கு தாய்சேய் நலம் எளிதில் அடைய சிறப்பு கவனம் செலுத்தி புதுமையான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் தரமான மருத்துவ சேவையை வழங்கிடும் வகையில் தமிழ் நாடு சட்டசபையின் 20222023ல் 07.05.2022 அன்று சட்டசபை அறிவிப்பு எண்110ன்படி 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என அறிவித்தார்கள்.

தமிழ்நாடு சட்டசபையின் அறிவிப்பின்படி, நகர்ப்புரங்களில் சுகாதாரத்திற்கான நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் தேசிய நகர்ப்புற சுகாதாரக் குழுமத்தின் மூலம் கட்டப்பட்டு நகர்ப்புற மக்களின் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது. இதற்கான அரசாணை (அ.எண்.365, மருத்துவம் மற்றும் மக்கள் நல வாழ்வு (EAP II1) துறை, நாள்:14.10.2022) மற்றும் அரசாணை (அ.எண்.436, மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வு (EAPII1) துறை, நாள் 27.12.2022) வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் 2021 2022ம் ஆண்டில் 593 மையங்கள், 202223 ஆண்டில் 115 மையங்கள் என மொத்தம் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அனுமதிக்கப்பட்டு அவைகளின் கட்டிட வசதி, மனிதவளம் மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றில், முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் 140, கோவை மாநகராட்சியில் 50, மதுரை மாநகராட்சியில் 46, திருச்சி மாநகராட்சியில் 25, சேலம் மாநகராட்சியில் 25, திருப்பூர் மாநகராட்சியில் 25 மற்றும் நகராட்சி பகுதிகளில் 189 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் என மொத்தம் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 06.06.2023 அன்று மாலை 5 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளது.

தேனாம்பேட்டை மண்டலம், வார்டு117க்குட்பட்ட விஜயராகவா சாலையில் அமைக்கப்பட்டுள்ள இந்த நகர்ப்புற நலவாழ்வு மையத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.06.2023 அன்று நேரடியாக திறந்து வைக்கிறார். மீதமுள்ள 499 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கிறார்கள்.

முதற்கட்டமாக செயல்படுத்தப்படும் நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் ஒரு மருத்துவர். ஒரு செவிலியர். ஒரு சுகாதார ஆய்வாளர் மற்றும் ஒரு துணை பணியாளர் வீதம் ஒவ்வொரு நகர்ப்புற நலவாழ்வு மையத்திலும் பணிபுரிய மாவட்ட சுகாதார சங்கங்களின் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். மேலும், நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரையிலும், பிற்பகல் 04.00 மணி முதல் இரவு 08.00 மணி வரையிலும் செயல்படும்.

இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் கர்ப்பிணி தாய்மார்களின் பராமரிப்பு, குழந்தைகளுக்கான நோய்தடுப்பூசி மருந்துகள் மற்றும் அனைத்து வயதினருக்கும் ஏற்படும் எளிய வகை தொற்று நோய்களான சளி மற்றும் இருமல் உட்பட பேறுசார் மற்றும் மகப்பேறு பச்சிளங்குழந்தை, பச்சிளம் குழந்தை பராமரிப்பு சேவைகள், குழந்தை நலம் மற்றும் வளரிளம் பருவத்தினர் நலம், குடும்பக்கட்டுப்பாடு, கருத்தடை மற்றும் இனப்பெருக்க குழந்தை நலச் சேவைகள் (Reproductive Child Health), தொற்று நோய்த்தடுப்பு, புற நோயாளிகளுக்கான எளிய மற்றும் சிறிய நோய்களுக்கான தடுப்பு, தொற்றாநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை, மனநலம் பாதிப்பு கண்டறிதல் மற்றும் சிகிச்சை, கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை பராமரிப்பு, பல் பராமரிப்பு, முதியோர்களுக்கான நோய்த்தடுப்பு சுகாதார சேவைகள், அவசர முதலுதவி சிகிச்சை விபத்து மற்றும் அவசரகால சேவை உள்ளிட்ட 12 வகையான அத்தியாவசிய மருத்துவ சேவைகள் நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் வழங்கப்பட உள்ளது.

மேற்கண்ட அத்தியாவசிய மருத்துவ சேவைகளைச் சார்ந்த 63 வகையான பரிசோதனைகள் நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் மேற்கொள்ளப்படும் இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் விரிவாக்கப்பட்ட மருத்துவ சேவைகளான வாய், காது மூக்கு தொண்டை, கண், முதியோர் நலம். மனநலம் மற்றும் சிறுகாய சிகிச்சைகள் ஆகியவை வழங்கப்படும். தொற்றா நோய்களான நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோய்களுக்கான உரிய மருந்துகளுடன் இணைந்து 171 வகையான மருந்துகள் வழங்கப்படுகின்றன .

நகர்ப்புற நலவாழ்வு மையம் சார்ந்த பகுதிகளில் உள்ள பள்ளிகளில் உள்ள பள்ளி சுகாதாரக் குழுவினருடன் இணைந்து தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும். மேலும், மையம் சார்ந்த பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கும் சுகாதார கல்வி மற்றும் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படும். நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் 14 வகையான ஆய்வகப் பரிசோதனைகள் மேற்கொள்ள தேவையான 32 வகையான மருத்துவக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நோயாளிகள் மருத்துவர்களை காணொலி வாயிலாக தொடர்பு கொண்டும் சிகிச்சை பெறலாம். மேலும், இசஞ்சீவினி இணையமுகப்பின் மூலமாக மருத்துவர் காணொலி வாயிலாக நோயாளிகளின் மேல்சிகிச்சைக்காக மற்றொரு முதுநிலை மருத்துவரின் ஆலோசனையை பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் அனைத்து நலவாழ்வு மையங்களிலும் செயல்படுத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், டாக்டர் ந.எழிலன் எம்.எல்.ஏ., ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதா கிருஷ்ணன், துறை சுகாதாரச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழுமத் திட்ட இயக்குநர் ஷில்பா பிரபாகர் சதீஷ், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - இரா.துரைராஜ் உணவு வழங்கினர்!

170 அ வட்டம் முழுவதும் முத்தமிழறிஞர் நூற்றாண்டு விழா!

வட்டச் செயலாளர் கோட்டூர் கோ.சண்முகம் தலைமையில்

சென்னை, ஜூன் 5

சைதை கிழக்கு பகுதி 170 “அ” வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு வட்ட கழகம் சார்பில் வட்டச் செயலாளர் கோட்டூர் கோ. சண்முகம் தலைமையில் பள்ளிப்பட்டு சேவாசமாஜ காப்பகத்தில் பயிலும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு அறுசுவை உணவு 3—6-2023 சனிக்கிழமை மதியம் மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் வழங்கினார். பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ் கலந்து கொண்டார். வட்ட கழகம் சார்பில் கோட்டூர் கோ. சண்முகம் முன்னிலையில் பல்வேறு தெருக்களில் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஆர்.ராஜ்குமார் தலைமையில் பள்ளிப்பட்டு சேவாசமாஜ காப்பகத்தில் பயிலும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. கலிக்குன்றத்தில் மு.மகேஷ் லாரன்ஸ், எஸ். கர்ணன், மு.பலராமன், வழக்கறிஞர் கொ.முத்துசாமி, எம்.ஆர். பாபு, க.ரகு, ஏ.சத்யா, த.விஸ்வநாதன், எம்.தமிழரசு, ஆகியோர் தலைமையில் கழக கொடியேற்றி உணவு வழங்கல். தொடர்ந்து, கழிக்குன்றம் திருவீதி அம்மன் கோவில் அருகில், பிள்ளையார் கோவில் தெருவில், ஸ்ரீராம் நகர் பள்ளிப்பட்டு சாலை கழக கொடியேற்றி உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அறிஞர் அண்ணா தெரு, கோட்டூர் ஏரிக்கரை சாலை மற்றும் குருவப்பன் தெரு, கோட்டூர் குருவப்பன் தெரு சந்திப்பு, ஆர்.எஸ்.ஸ்ரீதர் சாலை, கோட்டூர் திருவள்ளுவர் நகர், பெருமாள் கோவில் தெரு, அங்காளம்மன் கோவில் பகுதி, கோட்டூர் இரயில் நிலையம் அருகில், பீலியம்மன் கோவில் தெரு, ஏரிக்கரை மண்டபம் சாலை, கோட்டூர் மண்டபம் சாலை, மேற்கு கால்வாய் கரை சாலை ஜி.எச். பிளாக்கில், பாரதி அவென்யு மாந்தோப்பு பகுதி, கோட்டூர் மேற்கு கெனால் சாலை F பிளாக் அருகில் உள்ளிட்ட இடங்களில் கழக கொடியேற்றி இனிப்பு, உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

வட்ட இளைஞர் அணி சார்பில் எஸ்.பாலாஜி,வி. லோகநாதன், டி.விஜயபிரபாகர், ஆகியோர் ஏற்பாட்டில் டி பிளாக் முத்துமாரியம்மன் கோவில் அருகில் உணவு வழங்கும் நிகழ்ச்சி, மேற்கு கெனால் சாலை, மேற்கு கெனால் சாலை சி பிளாக் சி.எல்.ஆர்.ஐ.பழனி, எம். ராமு, ஆகியோர் ஏற்பாட்டில் ஏ.பி. பிளாக் அருகிலும் அந்த பகுதி கழக நிர்வாகிகள் ஏற்பாட்டில் கழக கொடியேற்றி உணவு வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளில் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் எம். சி. கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சிகளில் 170 “அ” வட்டத்தில் உள்ள பகுதி நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட மற்றும் பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணியினர், தகவல் தொழில்நுட்ப அணி பாக ஒருங்கினைப்பாளர்கள், மகளிர் அணியினர், கழக முன்னோடிகள் ,மற்றும் கழக தோழர்கள், கலந்து கொண்டனர்.

பஹ்ரைன், வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் ஏற்பாட்டில். தலைநகர் மனாமாவில் உள்ள கே.எம்.சி.சி அரங்கத்தில் நடைபெற்ற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கழக தி.மு.க. அயலக அணிச் செயலாளர், எம்.எம். அப்துல்லா எம்.பி., தமிழ் நாடு அரசின் புலம் பெயர்ந்த தமிழர்கள் நலவாரிய உறுப்பினர் எஸ்.எஸ். மீரான். பஹ்ரைன், வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் பொறுப்பாளர் முகமது ஹுசைன் மாலிம். துணைப் பொறுப்பாளர் சுல்தான் இப்ராஹீம். அவைத் தலைவர் பால்ராஜ், உதவி தலைவர் கருணாநிதி சண்முகம், இணைச் செயலாளர்கள் சுரேஷ் பூமாலை, மன்னை முபாரக், பொருளாளர் வேம்புராஜ், மணிவண்ணன், மேலப்பூந்தை இஸ்மாயில், ஆபீத் அலி, அசோக் குமார், பெருவை பிரபா, மன்னை செல்வம், அப்துல் சலீம், சதீஷ் குமார். மொய்தீன், சரபுதீன், ஸ்ரீதர் சிவா மற்றும் திருச்சி முபாரக் ஆகியோர் கலந்து கொண்டனர்.